DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**S.C. No.51 /2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW18 |
| Name | : | காதம்பரி |
| Father's / Husband's Name | : | ராஜசேகர் |
| Age | : | 32 |
| Religion | : | இந்து |
| Calling | : | முதல்நிலை காவலர் |
| Caste | : | வன்னியர் |
| Village | : | கன்னிகாபுரம் கிராமம், வேலூர் Tk |
| Date | : | 30.03.2021. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது இரத்தினகிரி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.12.2015 அன்று வாலாஜா காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்தபோது வாலாஜா காவல் நிலைய கு.எண்.424/2015 பிரிவு 366, 302 இதச வழக்கில் ஆய்வாளரிடமிருந்து கடவுச்சீட்டு பெற்றும் சோளிங்கர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு சென்று தபால் மற்றும் சம்மனை பெற்று வாலாஜா ஆசிரியர் காலனியில் உள்ள மணிகண்டன் என்பவருக்கு சம்மன் சார்வு செய்தேன். தபாலினை எடுத்து சென்று வேலூர் மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தேன். சார்வு செய்யப்பட்ட சம்மனை சோளிங்கர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். பின்னர் கடவுச்சீட்டினை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**S.C. No.51 /2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW19 |
| Name | : | தீனதயாளன் |
| Father's / Husband's Name | : | கன்னியப்பன் |
| Age | : | 38 |
| Religion | : | இந்து |
| Calling | : | முதல்நிலைகாவலர் |
| Caste | : | யாதவர் |
| Village | : | பாகவெளி |
| Date | : | 30.03.2021. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிப்காட் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.10.2015 அன்று வாலாஜா காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றியபோது வாலாஜா காவல் நிலைய கு.எண்.424/2015 பிரிவு 366, 302 இதச வழக்கில் ஆய்வாளர் உத்தரவின் பேரில் இறந்த நபர் சிவக்குமார், வயது 40 என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக பரிந்துரைக்கடிதம் ஆய்வாளரிடம் இருந்து கடவுச்சீட்டு பெற்றுக்கொண்டு வாலாஜா அரசு மருத்துவமனைக்கு சென்று காலை 10.30 மணிக்கு எம் ஓ. தலைமை மருத்துவரிடம் ஒப்புவித்து இறந்த நபரின் அடையாளத்தை பிணக்கூறு செய்த மருத்துவருக்கு பிரேதத்தை அடையாளம் காண்பித்து பிரேத பரிசோதனை செய்வதற்கு மருத்துவருக்கு உதவியாக இருந்து பிரேதத்தில் இருந்த மருத்துவர்

எடுத்துக்கொடுத்த உள்ளுறுப்புகளை பெற்று அவற்றை வேலூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்கு அவருடைய உறவினரிடம் ஒப்படைத்து அத்தாட்சி பெற்றேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**